This equal footing of men and women in a Society in which the highest truths will be intensely practical will draw the women of the East and the West into one common sisterhood, and this will make way for a world peace and a common Brotherhood of Humanity.

From the Unreal of the Present we will go to the Real of the Future, from the Death of To-day to the Immortality of Tomorrow, towards the Life and Light of the Ideal Woman.

Of the woman of today the poet sings:—

"O woman, you are not merely the handwork of God, but also of men; these are ever endowing you with beauty from their hearts.

"Poets are weaving for you a web with threads of golden imagery; painters are giving your form ever new immortality.

"The sea gives its pearls, the mines their gold, the summer gardens their flowers, to deck you, to cover you, to make you more precious.

"The desire of men's hearts has shed its glory over your youth.

"You are one half woman and one half dream."

What then will he not sing of the Women of the Future?

R. MUNDKUR.

WOMEN THE WORLD OVER

Japan

Although Japan is generally regarded as the one of most backward of all the big Powers of the world in the granting of social and political privileges to women, the congregation of the Fujimicho Church of Christ leads all congregations of Presbyterian churches in the world in the recognition of the feminine sex in one respect. This remarkable step forward was taken last week when eight women were chosen as Elders of the Church—the first time that any women have held that honor in a Presbyterian church.

Three villages of Higashi Uwa-gun in Ehime-ken can boast the first female fire brigades in Japan. The new brigades are made up of 400 women from three towns and are to work in conjunction with the regular fire-fighting forces.

A movement has been started by the women of Tokyo to aid the cause of international peace. 350 Japanese women, a number of foreigners and several Japanese leaders, among them Baron Sakatani and Viscount Shibusawa, organised the Japan Women's Association for the Promotion of International Friendship.

China

The original constitution of the Canton Government failed to define the qualifications of voters as to sex—an omission that the progressive Cantonese women were quick to recognize, and were proceeding to avail themselves not only of the franchise but the plums of office as well when masculine authority intervened. An amendment was introduced to rectify the omission, and it was this amendment that brought down upon the heads of the unlucky legislators a storm of indignation that expressed itself in the following remonstrance:

"Article 2 of the Constitution states that sovereignty of the Republic of China originates to the whole body of the citizens. Chinese women are citizens of the Republic and are therefore entitled to the enjoyment of the rights as mentioned in Article 5 of the Constitution. Nor do the regulations for the self-government of Hsien districts and the regulations for the election of magistrates specify that only men are eligible for holding public office and participation in the election. Well and good. But we have recently heard that the Assembly has modified these regulations in such a way that we women have been deprived of our right to vote and hold public office. In this you have violated the Constitution and you are thus no better than the unlawful Government in North China. Within this lawful territory no unlawful act can be tolerated. Therefore we command you to do away with amendments."

On the day the amendment was submitted to the Provincial Assembly the galleries were crowded with suffrage adherents, while it was evident that strong feeling prevailed between the 70 members on the floor but it was not until in the ensuing debate the chief point of objection raised was shown to be physical unfitness that the climax was reached. At this juncture the women rushed to the floor and proceeded to so demonstrate their muscular prowess and skill that the legislators appealed to the Civil Governor for soldier protection, the suffragists at the same time sending S. O. S. calls to the girls' schools for reinforcements. To add to the chagrin of the Assembly Members, the Governor (who was in sympathy with the women), instead of sending aid sent the cryptic message: "Be manly and face the inevitable." This injunction was not followed; the Members fled, leaving the hall in possession of the suffragists, one of whom preempted the Speaker's chair, called the meeting to order, and the feminine Assembly proceeded with the business of discussing punishment for the offenders.

Yet despite this victory, subsequent mass meetings and parades wherein banners were flown and leaflets distributed, saying, "We are determined to get what is ours," the qualifying amendment was on April passed, to the bitter disappointment of several thousand Chinese women, who, nevertheless, declare themselves undaunted in their determination to acquire that which has taken many years on the part of their sisters across the sea.

England

There has been an influential gathering in London under Viscountess Rhondda to start the new campaign for women's rights. You might have thought that women had got all they want, but this is not so. The initial spade work has been done, but the fruits have to be reaped. This is what is now called "the Six Point Campaign," and you will hear a good deal of it.

1. Creation of State scheme of widows' pensions.
2. Introduction of legislation to put right the position of the unmarried mother and her child. (Present legislation is years behind public opinion.)
3. Equal guardianship of children for married parents.
4. Strengthening of the law with regard to child assault cases.
5. Equal pay for men and women teachers.
6. Equal opportunities for men and women in the Civil Service.

There is now a very vigorous campaign to reduce the voting age limit of women to the same as that of men—21. There is not the slightest doubt that sooner

or later it will be successful and probably before the next General Election.

WE congratulate MISS K. SNELL, of Girton College, Cambridge, on the distinguished position she has secured for herself in the Law Examinations. As the Law Tripos is the only one in Cambridge which now brings out a Class List in the order of merit—the others having adopted the system of awarding merit by classes, as is habitual in Oxford—MISS SNELL appears absolutely as the first candidate, being placed by the examiners over the head of Mr. A. T. HARRIS, who comes from the University of Wales, Aberystwyth. MISS SNELL is a Girton girl, who was educated at the Effingham House School, Bexhill, and the only woman who has won a similar honor in the past is Miss P. G. FAWCETT, who some time ago was placed above the Senior Wrangler, amid the universal plaudits of her contemporaries.

Belgium

There has been a success and a failure in Belgium. The resolution to give women universal suffrage has not been passed by the Legislative Council and failed by a very small majority. The work of the Municipal vote, however, has been conceded and the women voted at the election a few weeks ago. Queen Elizabeth of Belgium voted in Brussels. She took her place in the queue at the polling office and was of course offered the first place. She refused however to vote out of her turn. In due course the Chairman called out "Elizabeth de Belgique" and Her Majesty voted.

Canada

Vancouver can claim the distinction of having the first Woman Cabinet Minister. Mrs. Mary Smith has just now been made a Cabinet Minister for the Legislative Assembly. She has been a member of Parliament for some time. In December 1920, she was elected by the largest majority of votes ever given to a candidate in the Canadian history. Immediately following this a local Cabinet nominated her to the position of a Speaker in British Columbia House of Parliament. Mrs. Smith has three grown up children and is also a grandmother.

Spain

A large deputation of Spanish women waited upon the Members of Parliament last week to demand complete equality of political and civil rights and various reforms with regard to the employment for women and legal rights regarding children. A great petition was also presented signed by thousands of women of all classes.

Turkey

Mme. Khalide Edib Khanum, a member of a family of Turkish intellectuals who has graduated with distinction at the Robert College for girls at Constantinople, has been appointed Minister of Education in the Government of the Grand National Assembly of Turkey. Mme. Khanum has contributed to *Le Temps*, and many prominent French, English, and American newspapers on Far Eastern problems. She played a large part in bringing about the Turkish Revolution of 1908.

Brazil

The first reading of a Bill for the enfranchisement of women has been approved by the Brazilian Senate.

Austria

Austrian women are now permitted to quality as lawyers and as judges. Dr. Marianne Beth, of Vienna who was recently over in this country, is the first Austrian woman, Doctor of Law. She has also obtained permission to enter at the Law Courts which opens the door to the judicial Bench, and is, therefore, a still more important step forward.

America

The University of Wyoming, the first State in America to obtain equal suffrage, and the University of Iowa, Mrs. Chapman Catt's native State, are to confer honorary degrees of Doctor of Laws upon this distinguished American woman suffragist, who was chiefly instrumental in obtaining the ratification of the Woman Suffrage Amendment in the United States last year.

A PROPHECY

(From the "Ode to Truth")

......Oh! then to Thy great plan
Shall rise the perfect Man,
Lord of himself, and Lord of nature's might;
And Woman, strong and sage,
No clinging appanage,
But free of life's whole realm in
her own spirit's right;
God-statured both, and angel-graced;
New earth's new Janus, not man
double-faced,
But Man and Woman, free and whole,
To search clear-eyed the widening
circle of the Soul!

JAMES H. COUSINS.

TAMIL

சொத்து விஷயமாக இந்து ஸ்திரீகளின் உரிமை

by

Kamala Bai

இந்து ஸ்திரீக்கு சொத்துக்குரிய பாத்தியதை!! அந்தோ! கலிகாலத்தின் அநேக கொடுமைகளில் இதுவுமொன்றோ! என்றுதான் இதை வாசிப்பவர்கள் அநேகமாய் நினைக்கக்கூடும். ஏனெனில் கலியாணகாலம் வரையில் தந்தையின் ஆசிரயத்திலும் கலியாணமான பிறகு பர்த்தாவின் ஆசிரயத்திலும் பிறகு பிள்ளையின் ஆசிரயத்திலும் இருக்கவேண்டுமென்று இந்து ஸ்திரீக்கு சாஸ்திர முறைப்படி கடமை யேற்பட்டிருக்க இவளுக்கு சுதந்திரமான ஆஸ்தி என்னத்திற்கென்றும், அப்படி அவர்கள் கைவிடும் காலத்தில் இவளுக்கு ஜீவனத்திற்குரிய "ஜீவனாம்சம்" என்னும் சிறுபாகத்தை இவள் பெறும்படியான ஏற்பாடு நம் தர்ம சாஸ்திரத்திலேயே ஏற்பட்டிருப்பதனால் தற்காலத்தில் இதைபற்றி யோசிப்பது அநாவசியமென்றும், இந்து தர்ம சாஸ்திர முறைப்படி இந்து ஸ்திரீக்கு, "மஞ்சட்காணி" அல்லது "ஸ்திரீதனம்" என்னும் தகப்பன் ஆஸ்தியை தவிர வேறு எதிலும் பாத்தியதை இல்லை. ஆகையால் இதைப்பற்றி இப்பொழுது வாதாடுவது வீண் என்றும் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றும் இவ்விஷயம் தரும சாஸ்திர சம்பந்தமாகவும் ஜனசமூக ஆசாரத்தைப்பொறுத்ததாகவுமிருப்பதினால் கவர்ன்மென்டார், இந்து புருஷர் சம்மதமின்றி ஒன்றும் செய்யமுடியாதென்றும் சிலர் அபிப்பிராயம். வேறு சிலர் சொல்வதாவது "காலத்திற்கேற்றபடி ஏதாவது ஸ்திரீகளுக்கு ஏற்பாடு ஆகத்தான்வேண்டும்" என்பதேயாம். கன்னிகையின் கலியாணகாலம் 8 வயதாக இருந்தது கொஞ்சங்கொஞ்சமாக அதிகரித்து 16 வயதிற்கு வந்துவிட்டது. மறுபடியும் 8 வயதுக்கலியாணம் ஏற்படுவது கஷ்டம், வளரும் பெண்ணின் க்ஷேமலாபத்தை தகப்பன் கவனிக்கவேண்டியபடியால் அவளை கலியாணம் செய்து கொடுப்பது ஒன்றைப்பற்றியே கவலை கொள்கிறான். இந்நிலைமையில் சரியான "வரன்" எப்படியாவது தன் பெண்ணிற்கு கிடைக்கவேண்டுமென்று, அநேகவிதமான பிரயத்தினங்களை அவன் செய்யும் சமயம் பார்த்து பண ஆசை காட்டுபவர்கள் அநேகர். இவர்கள் இவ்விதம் செய்யக் காரணம், இந்து மதத்தில் பெண்களை விவாகமின்றி வைத்தல் கூடாது என்று வற்புறுத்தியிருக்கிறதென்ற சாதாரண ஜனக் கொள்கையேயாம். இவ்வித கொள்கையேற்பட என்ன காரணமோ, தெரியவில்லை. ஏனெனில், ஆதியில் ஆஜன்மபரியந்தம் கன்னிகைகளாகவே காலங்கழித்தவர்கள் ஜனகமஹாராஜா காலத்தில் இருந்ததாக ஆராய்ந்தறியலாம். நிற்க,

சாத்ர்ரணஜனக் கொள்கைப்படி விவாஹம் மத சம்பந்தமானதென்று ஏற்பட்டதினால் தன் பெண்ணிற்கு தன் வாழ்நாளிலேயே நல்ல கதி கிடைக்க விரும்பும் பெற்றோர்கள் எப்பாடுபட்டாவது தம் கருத்துப்படி நல்ல வரனை தேடிக் கொடுக்கிறார்கள். ஐயோ பாவம்! ஆனால் ஒன்றுண்டு. பணத்தாசையால் கலியாணம் செய்துகொண்டவரும்; பணமதத்தால் செய்துகொண்டவரும்; கொஞ்ச காலத்திற்குள், பெண்ணின் பெற்றோருக்கு "நல்ல புத்தி மதி" கற்பித்துவிடுகிறார்கள். அவர்களும் அஞ்ஞானம் நீங்கியவர்களாய், "ஐயோ" இவ்வளவு சீர் செலவு செய்து முடித்த கலியாணத்தின் பலன் இதுதானா? இச்செலவின் பணம் அவளுக்கே கொடுத்திருந்தாலும், அவள் வாழ்நாள் மானக்குறைவின்றி கழிந்திருக்குமே என்று பச்சாத்தாபமடைகிறார்களென்பதில், என்னுடன் அநேக பெற்றோர்கள் ஒத்துரைப்பார்கள். தன் பிதிரார்ச்சித சொத்திலிருந்து பெண் கலியாணத்தின் பொருட்டு வேடிக்கை ஆடம்பரங்களுக்காகவும், சீர் முதலியவைகளுக்காகவும் ஆயிரக்கணக்காக செலவழிக்கத் தயாராயிருக்கும் தகப்பன் தன் பெண்ணின் ஆஸ்தி யென்று வாயினாற் சொல்லக்கூட துணியமாட்டான். அவ்விதமே ஏழைத்தகப்பன் எப்படியாவது கடன் வாங்கி கலியாணம் செய்கின்றவன் தன் பெண்ணைப்பள்ளிக்கூடத்திற்கனுப்பவாவது, அல்லது வேறு வேலைகளில் பயிற்றுவிக்கவாவது, கடன் வாங்கத்துணியான்.

இது பெண்களின் கன்னிப்பருவத்தில் அடையும் துர்த்தசை. விவாஹமான பிறகு, பெண்ணுக்கு நல்வசத்தால் சரியான துணைவன் இருந்தால்தான் ஒன்றும் பேசக்காரணமில்லை, ஆனால் இது ஆயிரத்தில் ஒன்றாகத்தான் சொல்லலாம். அல்லது பணசங்கதி வருமளவில் சரியான துணைவனாயிருந்து பிறகு எதிரிடையான கணவர்களுமநேகர். அப்படி சரியான துணைவர்களகப்படாதபக்ஷத்தில் அப்பெண்ணின் கஷ்டத்தை சொல்லவேண்டுவதேயில்லை. அத்தகைய கணவன் காரணமின்றி அவளை பெற்றோரகம் அனுப்பினாலும் அனுப்புவான். அல்லது வீட்டிலேயே வைத்துக் கொண்டு, அநேகவித துன்பங்களுக்கும் ஆளாக்குவான்; அவளிருக்கும்போதே இரண்டாம் தாரத்தையும் விவாகஞ் செய்துகொள்வான். (இது அநேகமாய் வடதேசங்களில் விசேஷமாய் நடந்துவருகிறது) அதிக வாதாடினால் சிறு தொகையான ஜீவனாம்சத்தை கொடுத்து துரத்திவிடுவான். இவ்வளவிற்கும் இவனுக்கு அதிகாரமுண்டு. ஆனால் இவன் ஊரறிய விபசாரியாயிருந்தாலும், குடிகாரனாயிருந்தாலும், துஷ்டனாயிருந்தாலும், நாஸ்திகனாகவிருந்தாலும், பணமிரைப்பவனாகவிருந்தாலும், இவனிடமுள்ள ஆத்மதத்துவத்தையே, இவன் மனைவி பார்த்தால்தான் ஆனந்தமடையலாம். இவனை எவ்விதமான பந்தத்திலும் வைத்து சீர்திருத்த சக்தியற்றிருக்கிறாள். ஆனால் தத்துவஞானமில்லாமல் அன்பால் சீர்திருத்த முடியாதோவென்றால், காந்தத்திற்கு இரும்பைமட்டும் இழுக்கும் சக்தியுண்டேயொழிய மரத்தையிழுக்கும் சக்தியில்லை. அதுபோல, அன்பிற்கும் உட்படும் சுபாவங்கள் சிற்சிலவே. ஆகையினால், பணத்திற்காகவும், "சீர்" ஆசையினாலும் நடைபெறும் விவாகங்களில் இனிய சுபாவம் அருமையாகவே காணப்படும்.

"தர்மத்திலும்," "அர்த்தத்திலும்," "காமத்திலும்," அக்நி, பிதிர்கள், பஞ்சமஹாபூதங்கள் இவை சாக்ஷிகளாக யாரை இன்னுயிர்த்தோழியாககைபிடித்தானோ அவளை அந்தரத்தில் நிறுத்துவதில் அவனுக்கு கொஞ்சமேனும் கூச்சமுண்டாவதில்லை. இக்காலத்தில் தருமத்தின் நிலையும் இந்து ஸ்திரீகளின் நிலைமை யடைந்திருக்கிறது. "தர்மத்தில் பங்காளி" என்று கலியாணத்தில் சொல்லும்போது, "நீ எனக்கு எந்த தரும மார்க்கத்தின் பங்காளி ஆகிறாய்?" என்று கேட்கும்படியான நிலைமை ஸ்திரீகளுக்கு—பெண்களுக்கு இருந்தால் இக்காலத்தில் அது ஒரு வேடிக்கையாகவிருக்கும்; அதாவது தாம் எக்கொள்கையை அநுசரிக்கிறோம், எந்த மதத்தை தாம் பாவிக்கிறோம், தாம் பாவிக்கும் மதத்தின் பங்காளியாக தாம் இம்மனைவியிடத்தில் கூறுகிறோமா? என்பதை இக்காலத்தில் விவாஹங்களில் கணவர்கள் நன்றாய் ஆலோசித்திருப்பார்களென்று நான் நம்பவில்லை. முன்காலத்தில் சிறுவயதில் கலியாணம் நடந்துகொண்டிருந்தாலும், இக்காலத்திய மதக் குழப்பங்கள் அதிகமாயில்லை. வேதங்களை பிரமாணமாக வைத்துக்கொள்பவர் இந்துக்களென்றும், தர்மம் என்ற வார்த்தைக்கு "இந்து தர்மம்" என்றும் ஏற்பட்டுவிட்டதனால், வதூவரர்கள் அறியாச் சிறுவர் சிறுமிகளாயிருந்த போதிலும், தான் சொன்ன சொல்லுக்கும், நடக்கும் நட

வடிக்கைக்கும் விரோதமுண்டாகவில்லை. ஆனால் தற்காலத்தில் வேதங்களில் அவநம்பிக்கை யுண்டானவனும், தரும சிந்தையற்றவனும் இவ்விதங்கூறுவது தகுமோ? இதில் மனைவி எப்படி பங்காளியாவாளோ தெரியவில்லை.

அப்படியே, அர்த்தத்திலும் அதாவது பணங்காசு முதலிய விஷயங்களிலும் அவள் எப்படி பங்காளி யென்பதை, "ஜீவனாம்சம்" என்னும் பதத்தால் தெரிந்துகொள்ளலாம். அதாவது (ஜீவனத்திற்கு) உயிர் தரிக்க எவ்வளவு தொகை வேண்டுமோ அவ்வளவுமட்டும் அவளுக்கு பாத்தியதையாம்; மற்றபடி அவளுக்கு புருஷன் சொத்தில் ஒன்றுமே பாத்தியமில்லையாம். இதை நான் எழுதும்போது, இந்து ஸ்திரீயானவள் தன்புருஷன் வீட்டில் தன் சுயராஜரீகத்தை நடத்திக்கொண்டும், தானதர்மங்களுக்குத் தானே அதிகாரியாய் புருஷனுக்கு மேலாகவே செலவு செய்துகொண்டும், ஆயிரக்கணக்கான ஸ்திரீகளிருக்கிறார்களென்றதை நான் மறந்துவிடவில்லை, ஆனால் நான் சொல்ல துணிவது என்னவென்றால், ஸ்திரீகள் தம் உரிமைகளை யடைவதற்கு புருஷர்களும் உதவவேண்டியது நியாயமாயிருக்க, அநேக ஸ்திரீகள் விஷயத்தில் புருஷர்கள் மனமிரங்கித் தயவாகவேனும் ஸ்வாதந்திரியம் கொடுப்பதில்லை. ஆகையால் ஸ்திரீகள் தமது சுக சௌகரியங்களை பெறவேணு மென்பது அவர்களுடைய பிறப்புரிமை. புருஷர்கள் இதற்கு அநுகூலமாயிருக்க வேண்டுவது அவர்கள் கடமை. இங்கு நியாயமான கடமையை வற்புறுத்துகிறேனேயொழிய, தயவான உதவியை வேண்டுகிறேனல்லன்.

மூன்றாவது இதைப்பற்றி நான் எழுதப்புகுவது அநாவசியம். இம்மாதிரி மூன்று வாக்குத்தத்தங்களில் "தரும பத்தினி" எந்நிலையிலிருக்கிறாள் என்பதை ஊகித்து உணரவும்.

இதுவரை ஸ்திரீயானவள், கன்னிகையாகவும், மனைவியாகவும் இருக்கையில் படும் கஷ்ட நிலைமைகளைப்பற்றி ஆலோசித்தோம். மூன்றாவது, அவள் மாதாவான பிறகு அவள் நிலைமையைப்பற்றி யோசிப்போம், "ந மாது: பரம்தைவதம்" என்பார்களல்லவா? இந்த தைவபதமடைந்த மாதாக்களின் தற்கால கதியை வர்ணிப்பேனேயாகில் அநேக புத்திரர்களின் தூஷணைக்கு நான் ஆளாவேன். இதற்கு புத்திரர்களே காரணமென்று சொல்லக்கூடியதல்ல. காலவிபரீதமும், தற்காலப்படிப்பின் தோஷமும், பெற்றோர் தாமேயும் இந்நிலைக்குக்காரணங்கள். காலத்திற்கேற்றபடி பிள்ளையை படிக்கவைத்து பரீக்ஷையில் தேர்ந்தபின் விவாகம் முடிப்பதனால், வீட்டுக்கு வரும் பெண் முன்காலத்திற்போல் சிறியவளாயிராமல் அறிந்தும் அறியாதவளுமாக வீட்டுக்கு வருதவனால், அநேகவிதமான இடையூறுகளுண்டாவதும், இன்னும் அநேகவித காரணங்களால் மறுபடியும் ஸ்திரீயானவள் புத்திரன் தயாதாக்ஷிண்யத்தால்தான் பிழைக்கலாம். உயிர் தரிக்கவேண்டியதற்குமட்டும் அவசியமானதை வாங்கிக்கொண்டு பிழைப்பதுதான், தாய் இந்த குடும்பத்திற்காக பட்ட கஷ்டத்தின் பலன்!!! இதை இவ்வளவு விவரித்து எழுதுங்காரணமாவது சொத்தின் ஆசைப்பட்டல்ல. ஆனால் தற்காலத்தில் இந்து ஸ்திரீயின் நிலைமை எப்படி இருக்கிறதென்றும், ஸ்திரீ நல்ல நிலைமையிலிருந்தால் தேசம் நன்மையடையுமென்றும், இப்படி நல்ல நிலைமையிலிருக்கும் பொருட்டு தற்காலத்தில் ஸ்திரீகளுக்கு அநேகவிதமான சுதந்திரங்களை கொடுக்க நம் ஜனங்கள் தயாராகிவரும் இச்சமயத்தில் நமது குறைகளை நாம் எடுத்துச்சொல்வோமாகில் அது வீணாகாதென்றும் நம்பி 1920 வருஷம் டிசம்பர் மாதம் 28-ம் தேதி. சென்னை செனெட் ஹௌஸில் ஸ்ரீமதி ரங்கநாயகியம்மாள் அக்ராசனத்தின்கீழ் நடந்த ஸ்திரீகளின் கான்பரன்ஸில், ஸ்திரீகளைப் பொருந்திய சில தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகளில் 10-வது தீர்மானமாவது "இந்து ஸ்திரீகளின் சொத்திற்குரிய பாத்தியதை" யென்று ஒரு தீர்மானமிருந்தது. கான்பரன்ஸில் இதற்கு நேரமில்லாததனால் இந்த தீர்மானத்தை சபையில் எடுத்துப் பேசவில்லை. என்றாலும் அதைப்பற்றி பொது ஜனசம்மதம் எப்படியிருக்குமோ? அதை அறிய ஆவலாயிருப்பதினாலும் மிஸ்ஸஸ் கஸின்ஸ் அவர்கள் இவ்விஷயத்தைப்பற்றி எழுதியனுப்ப சொன்னதின்பேரிலும் எழுதத்துணிந்தேன்.

இந்த தீர்மானத்தின் அபிப்பிராயமாவது :—இந்த சபையினால் "ஸ்திரீகள் தமக்கு சொந்தமான ஆஸ்திகளை வைத்துக்கொள்ள பாத்தியதையுள்ளவர்களாக வேண்டுமென்று தீர்மானிக்கப்படுகிறது. (1) அதாவது கன்னிப்பருவத்தில் தகப்பனாரின் பிதிரார்ச்சித சொத்தில் இந்து சாஸ்திர சட்ட முறைப்படி பெண்ணின் கலியாணச்செலவிற்கு ஓர் பாகம் உண்டென்பதை, அவள் கலியாணம் செய்துகொள்ள அபிப்பிராயமில்லாதிருக்கும்பக்ஷத்திலும், அல்லது தகப்பன் விவாஹம் செய்யாமலிருக்கும்பக்ஷத்திலும், அதை அவள் அடைய பாத்தியப்பட்டிருக்கிறாளென்றும்: மனைவியின் நிலைமையில்—: புத்திரர்களும் தகப்பனும் பெறும், பங்குகளுக்குச் சமமாக மனைவியும் அடையவேண்டும், புத்திரனில்லாதபக்ஷத்தில் புத்திரன் ஜனிக்கும்வரையிலும் புருஷனுக்குச்சரியான பங்காளியாகவேணுமென்று இச்சபை வற்புறுத்துகிறது."

இதில் சிலர் சமுசயங்களைபற்றி விசாரிப்போம், விவாஹமானவுடன் பெண்ணானவள் சரிபாகத்தை எடுத்துக்கொண்டு பெற்றோர் வீடுபோய்சேர்ந்தால் என்ன செய்வது?" விசித்திரமான கேள்வி! அப்படிபோக புருஷனிருக்கையில் அவளுக்கு இரண்டாங்கலியாணம் செய்துகொள்ள சாஸ்திர சம்மதமில்லை. கலியாண தாம்பத்யத்தை போக்சடித்துக்கொண்டு போகிறவள் சொத்து கொடுக்காவிட்டாலும் நீங்கள் நம்பிவிட்ட நகை நாணயங்களை எடுத்துக்கொண்டோடிவிட்டால் என்னசெய்வீர்களோ அதையே இந்த காரியத்திலும் செய்தல்கூடாதோ? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு விடை தமக்குத்தாமே யோசித்துக்கொள்வது நலம். இதை எழுதுவது அநாவசியம்.

சில பெயர்களுடைய அபிப்பிராயமாவது :—மகம்மதிய சட்ட முறைப்படி பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும், சமமாக பங்கிட்டுக்கொடுப்பதானால் இது இந்து குடும்பத்தின் சௌக்கியத்திற்கு விரோதமாகும். எப்படி எனில் பிள்ளைகள் "குலதர்மம், குலாசாரம், பரம்பரையாய் வந்த சுவாமி பூஜைகள், பிதிர்காரியங்கள், இவைகளை செய்ய கடமைப்பட்டிருப்பதினாலும் பெண் அன்னிய வம்சத்தை சேருகிறவளென்ற கொள்கையினால் பிள்ளைகளே அதிகமாக அடைய உரியவர்களாவார்கள் என்பதேயாம். தவிரவும் பெற்றோருடைய குலம், கோத்திரம் பெயர் மாறி தன்வம்சத்திற்கு கொண்டுவரப்பட்ட பெண்ணின் பாகத்தை கொடுக்க, அவள் ஆயுள்நாளை விலைக்கு வாங்கினதைவிட அதிக உரிமையோடு கொள்ளும் புருஷன் கஷ்டப்படுவானேன்? ஜீவனாம்சம் என்னும் வார்த்தையே, ஸ்திரீ ஜாதிக்கு மாத்திரமல்லாமல், புருஷ ஜாதிக்கும் இழிவுதரத்தக்கதாயிருக்கிறது.

எல்லாம் சரிதான். இது நடப்பதெப்படி? இந்து சாஸ்திர முறைப்படி ஒன்றுமே செய்வதற்கில்லை யென்பார் சிலர். ஆனால் சற்று யோசித்துபார்ப்போமாகில் அசாத்தியமானதும் ஒன்றும் தெரியவில்லை. மனமுண்டானால் இடமும் உண்டு. ஜனங்கள் யாதொன்றைத் தீவிரமாய் விரும்புவார்களோ அது நிச்சயம் கைகூடும். ஸதீ என்னும் உடன்கட்டை யேறும் கொடிய வழக்கத்தை நிறுத்த சட்டம் ஏற்பாடு செய்த கவர்ன்மென்டாருக்கு எவ்வித சகாயமிருந்தது? சதியிலேயாவது அனலில் குதித்து ஒரேவிதமாய் அவள் துக்கம் தீர்ந்துகொண்டிருந்தது, தற்காலத்திலோ அந்த சதியில்லை யென்றாலும் அவர்கள் படும் வேதனையைச் சொல்ல அளவுமுண்டோ? சதிக்கு உள்ளாக்காமல் நாம்.

பிழைத்திருக்கும்படி நம்மை விடுவித்தவர்கள் நமக்கு பிழைக்க வழி தேடிவைக்கவேண்டாமோ? பிழைக்கும் பிழைப்பு மானப்பிழைப்பாய் இருக்கவேண்டுவது அவசியமன்றோ? தம் மதத்திலிருந்து விலகிப்போனவர்களுக்குக் கூட தர்ம சாஸ்திர சம்மதமில்லாமலிருக்கும்போதும் புது சட்டத்தினால் அவர்கள் தங்கள் பங்கைப்பெறும்படியான சட்டமிருப்பதாக கேள்வியுற்றிருக்கிறேன். முன் காலத்தில் ஒரே பெரிய குடும்பத்தில் உறவினர்கள் வாழ்ந்து வருகையில் குடும்பத்தலைவர்கள் மற்றவர்களைப் பாதுகாக்க தாம் கடமைப்பட்டிருக்கிறதாக உணர்ந்து தம் கடமையைச் செய்துவந்தகாலத்தில் இந்து தர்ம சாஸ்திரமெழுதப்பட்டது. அந்தக்காலத்திற்கு அது சரியாயிருந்தது.

இக்காலத்திலோ யாவரும் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளும் நாளாயிருக்கும்போது ஸ்திரீகள் விஷயம் மாத்திரம் 1000 வருஷம் முன்னதாக விருந்தபடி இப்பொழுது நடக்கவேணும் என்று வற்புறுத்துவோர் சுயநயம்பாராட்டுபவர்களாய்த்தானிருக்கவேண்டும். இவர்கள் தம் வாழ்நாளையும் 1000 வருஷம் பின்னுக்கு கொண்டுபோவார்களேயானால் நாம் குறைப்படக்காரணமில்லை.

கமலாபாயி.

அக்கிராசனபதே, சகோதரிகளே,

தேசமெங்கும் பலவகுப்பாரும் தங்கள் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ள முயன்றுவருகிறார்கள். அதில் தாங்கள் அடையவேண்டிய அபிவிருத்தி, பாத்தியம், முதலியவைகளை யோசித்து அவைகளை அடைவதற்கான வழிகளை தேடி வருகிறார்கள். இந்திய ஸ்திரீகளாகிய நாமும் அவைகளைப் பற்றி சிந்திக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நாம் எந்தெந்த வழிகளில், சீர்திருத்திக்கொள்ளவேண்டியதென்பதை அறிந்துகொண்டும், அவைகளை அடைவதற்கான உபாயங்களை, நேர்மையும், நியாயமும், சாவதானமுமான முறைகளில் செய்துவருவோமானால் பூர்வீகத்தில் நமக்கிருந்த மேன்மையையும், சுதந்தரத்தையும் மறுபடியும் நாம் அடைதல்கூடும்.

அநேக நூற்றாண்டுகளுக்கு முற்பட்டே நம்தேசம் நாகரிகத்தில் முதன்மை பெற்றிருந்தது என்பதில் சந்தேகமில்லை. நமது புராணங்களிலும், சரித்திரங்களிலும் ஸ்திரீகளைப்பற்றி சொல்லப்பட்டிருப்பதில் புருஷர்களுக்குச் சமமாகவே அநேகவகைகளில் ஸ்திரீகளும் தேர்ச்சி பெற்றிருந்ததாக தெரியவருகிறது.

ஆக்னிவர்மன் மனைவி, பாண்டிய தேசத்து ராஜபுத்திரி சித்ராங்கதை, சிகண்டி, சமீபத்தில் 18-வது நூற்றாண்டில் அகல்யாபாய், தாராபாய் முதலியவர்களும் ராஜ்யத்தை ஆண்டதாகவும், குந்திதேவி ராஜ்யதந்திரத்தை தனது புத்திரர்களுக்கு உபதேசித்ததாகவும், ரகுவம்சத்திலும், பாரதத்திலும் சரித்திரத்திலும் சொல்லப்பட்டிருப்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மேலும் கைகேயி, சம்பாசுரனுடனும், சத்தியபாமை நரகாசுரனுடனும் யுத்தம் புரிந்ததாயும் இன்னும் அநேக ராஜபுத்திரஸ்திரீகள் யுத்தத்தில் கைகலந்ததாகவும் ஏற்படுகிறது. தவிர ஸ்திரீகள் நியாயஸ்தலங்களிலும், கிராமபஞ்சாயித்து முதலிய நீதி ஸ்தலங்களிலும் இருந்திருக்கிறார்கள். இதுபோல் இன்னும் அநேகவிதங்களில் மேன்மை அடைந்திருந்த நமது ஸ்திரீகளின் நிலைமையானது அந்நியரின் ஆட்சியின்கீழ் வந்த பிறகுதான் தாழ்மையடையவிடப்பட்டது. கிரமமாய் நமக்கு இருந்த உயர்நிலைமையை நாம் இழந்ததுடன், நமது உரிமைகளையும் உபயோகிக்கக்கூடாமல் காலாவதியடைந்துவிட்டது. இவைகளையெல்லாம் யோசிக்குங்கால் நமது அறியாமையும், அசிரத்தையும்கூட காரணங்களாயிருக்கலாம்.

தற்காலத்தில் ராஜகீய விஷயங்களில் நமக்கு ஒருவித பாத்தியதையும் இல்லாததினால் நாம் முன்னேற்றம் அடைவதற்கு அவசியமான சௌகரியங்களைப்பெறச் சாத்தியப்படவில்லை. தேசத்தில் நடைபெறும் சம்பவங்களாகிய, யுத்தம், பஞ்சம், கொள்ளைநோய், விதரணையில்லாத அரசாட்சி இவைபோன்றவைகள் பிரஜைகள் எல்லோரையும் பாதிக்கக்கூடிய விஷயங்கள். இவ்வாறிருக்க, ஜனத்தொகையில், பாதிக்குமேல் இருக்கும், ஸ்திரீபிரஜைகளாகிய நம்மை, ராஜகீய விஷயங்களில் கலந்துகொள்ளாமல் விலக்கிவிடுவது நியாயமா? ஆட்சிமுறைகளில், புருஷர்களுக்கு எவ்வளவு குறைகள் இருக்கின்றனவோ, அவ்வளவு குறைகள் நமக்கும் உண்டு. நமது குறைகளை நிவர்த்தித்துக்கொள்வதற்கு, வேண்டிய சகாயத்தை அரசாங்கத்தார் கொடுக்கவேண்டுவது சரியல்லவா? சீர்திருத்தத்திலும், சுதந்திரம் அடைவதிலும், பிரஜைகளை சமமாய் பாவிக்கவேண்டியதல்லவோ ஒழுங்கு!

நமது தேசத்திற்கு, புதிய சீர்திருத்தச்சட்டம் அளிக்கப்படுவதற்கான முறையில் நம்தேசத்தாரின் நோக்கங்களையும், கோரிக்கைகளையும், நேரில் கலந்து தெரிந்துகொள்ளும் பாவனையாக, **மிஸ்டர் மாண்டேகு** இவ்விடம் வந்தபோதும், இங்கிலாந்தில் ஜாயிண்டு கமிட்டி முன்னிலும், மற்றவர்களைப் போல் நாமும் நம்முடைய பிரதிநிதிகள் மூலமாய் ராஜாங்க விஷயத்தில் சமபாகஸ்தர்களாகச் சேர்ந்துகொள்ளும்படியான நம்சுதந்திரங்களை, நிர்ணயித்துவிடவேண்டுமென்று, மனுச்செய்துகொண்டோம். நமது வேண்டுகோள் மறுக்கப்பட்டதுடன்கூட, ஏற்கனவே இருந்த, இரண்டொரு உரிமைகளும் நீக்கப்பட்டனவென்று, கேள்விப்படுகிறோம். அவைகளை ஆராய்ந்துபார்த்தால்தான் உண்மை வெளிவரும். எதற்கும் நாம் சளைத்துவிட வேண்டாம். நமது கோரிக்கைகள் நியாயமென்று உணர்ந்த நம் சகோதரர்களில் சிலர், நமக்காக சட்டசபையில், பாடுபடுவதாய் வாக்கு அளித்து இருக்கிறார்கள். நமது நன்றியை அவர்களுக்கு செலுத்துவோமாக. நம்மைக் கலக்காமல் நமக்காக அளிக்கப்படும், சீர்திருத்தங்களாவது சுதந்திரங்களாவது நமக்கு உசிதமாய் அமைந்திருக்குமென்று நாம் எதிர்பார்க்க முடியாது. மேலும் நமக்கு வேண்டிய, அற்பவிஷயங்களுக்கும் ஆண்பிள்ளைகளின் உதவியை நாம் நாடவேண்டியிருப்பது, அசந்தர்ப்பமாயிருக்கிறது. ராஜகீய விஷயத்திற்கு வேண்டிய சில அருமையான குணங்கள், (அதாவது) (1) அனுதாபம், (2) சிக்கனம், (3) ஊக்கம், (4) பொறுமை, (5) பகுத்தறிவு முதலியவை பிறவியிலேயே நமக்கு அமைந்திருக்கின்றன. இவைகளுந்தவிர, வேண்டிய அவகாசமும் இருக்கிறது. அதிர்ஷ்டவசத்தால் நம் குடும்பத்திற்காக சம்பாதிக்கிற பொறுப்பை (எளியவர்களைத்தவிர) அநேகமாய் புருஷர்கள் ஏற்றுவருகிறார்கள். செல்வவான்கள் வீட்டில் குடும்ப காரியங்களைச்செய்ய வேலைக்காரர்கள் இருப்பதால், ஸ்திரீகளுக்கு சரிவர வேலைகள், நடக்கின்றனவா என்று மேல் பார்ப்பதைத்தவிர மற்ற நேரங்களை விருதாவாய் போக்குவதைவிட நமது சமூகத்தாரை முன்னுக்கு கொண்டுவருவதற்கான அநேக வழிகளில், உழைப்பது உத்தமமில்லையா?

சமீபத்தில், முனிஸிபாலிட்டியில் நமக்கு வோட்டுக்கொடுக்க சுதந்திரம், அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அதின் கௌன்ஸிலில் நாம் இடம்பெறுவதற்கான, சுதந்திரம் கிடைக்கவில்லை. நம் நாட்டிற்கு வேண்டிய, சுகாதார விஷயங்களாகிய சாக்கடை அமைக்கப்படுவது, வீட்டின் குப்பைகளை அப்புறப்படுத்துவது, சுத்தமான தண்ணீர் கிடைக்கச்செய்வது, தெருக்களில் வெளிச்சம்போடுவது, உணவுபொருள்களிலும், சிசுக்களுக்கு வேண்டிய ஜீவாதாரமான பாலிலும், கலப்பில்லாமல் பார்ப்பது, ஆகிய இவையெல்லாம் முனிஸிபாலிட்டியாரைப்பொறுத்தவை. அவை

களிலிருந்து பெறவேண்டிய சௌகரியங்களை நாம் கௌன்ஸிலில் இருந்து நடத்திக்கொண்டால்தான் விமரிசையான தோரணையில் செய்து கொள்ளலாம். ஆகையால் நாம் பிரதிநிதித்வம்பெறவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறதல்லவா?

இதுபோலவே சட்டசபையிலும் இருந்துகொண்டு நம் சகோதரிகளின் தேவைகளை நடத்திக்கொள்ள பார்க்க வேணும். வேலை செய்து பிழைக்கும் எளிய நிலைமையிலுள்ள நமது சகோதரிகளின் விஷயத்தில் அவர்கள் கண்ணியமாகவும், ஆதரவோடும், வஞ்சனையில்லாமலும், நடத்தப்படுவதற்கான வழிகளில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மேற்படியார்கள் தங்கள் கஷ்ட நிலைமையை உத்தேசித்து பலதொழில்களில் உழைத்துவருவதில் தங்கள் பூர்ணசக்தியையும், முழு நேரத்தையும் அர்ப்பிக்கிறார்கள். அப்படி இருக்கையில் அவர்களுக்கு கொடுக்கப்படும் கூலியானது குறைவாயிருப்பானேன்? வேலையின் தன்மையை உத்தேசித்து கூலியின் விகிதங்களை வித்தியாசப்படுத்தலாமே தவிர ஒரேதொழிலில் ஆண், பெண் என்ற வித்தியாசத்தை உத்தேசிப்பதின் நியாயமென்ன? ஸ்திரீகள் என்ற பிறப்பினாலேயே குறைக்கூலி வாங்கவேண்டும் என்பது அவர்களின் உரிமையா? கூலியை சமமாகக்கொடுப்பதுடன், கர்ப்பிணிகளின் விஷயத்தில் பிரசவிப்பதற்கு ஒருமாதம் முன்னும் பின்னும் அரைக்கூலியுடனாவது, சம்பளத்தோடாவது, ரஜாக்கொடுக்கவேணுமாய் சட்டங்களைக்கொண்டு திட்டப்படுத்தச்செய்யவேண்டும்.

தண்டனையடைந்த கைதிகளின் விஷயத்தில் அனுதாபங்காட்டி அவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனையானது மறுபடி அவர்களை அக்குற்ற வழியில் பிரவேசிக்காமலிருக்கும்படியான மார்க்கங்களில் திரும்பக்கூடிய சாதனங்கள் நிறைந்ததாய் இருக்க பலவித உபாயங்கள் செய்யப்படலாம். கடுமையான தண்டனை விதித்து, இழிவாய் நடத்தப்படுவது, பயமுறுத்துவது, இவைபோன்ற வழிகளை, அரசாங்கத்தார் சற்று தளர்த்தி, கடவுளிடத்திலும், நன்னடத்தையிலும் அவர்கள் மனதை செலுத்துவதற்கான நற்போதனைகளை அடிக்கடி செய்வித்து, கல்வியை போதிப்பது, பிழைப்பதற்கு உபயோகமான கைத்தொழில் பழக்கிவைப்பது, இவை முதலான பலவித உபாயங்களாலும், பக்ஷமாய் நடத்தப்படுவதாலும், அக்குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டது தங்கள் நன்மையைக்கோரி நல்லவழியில் கொண்டுவருவதற்காகவே தான் என்றுணர்வார்கள். ஸ்திரீ கைதிகளை நடத்தும் விஷயத்தைப்பற்றி அதிக கவனம் அவசியமாயிருக்கிறது. அதில் தீவாந்தர சிக்ஷை விதிப்பதையே நிறுத்திவிடச் செய்யவேண்டும். மேற்படி சிக்ஷை அடைந்தவர்களின் கதி அதோகதியாய்விடுகிறது. இவ்விஷயத்தில் ஆண், பெண், என்ற பேதங்கள் இல்லாமல் எல்லாக்குற்றவாளிகளையும் ஒரேதீவில் வசிக்கவிடுவதினால் நேரிடும் துன்பங்கள் சகிக்க முடிவதாயில்லை. அவ்விடத்தில் வாசமோ நரகத்திற்கு சமமென்று அறிந்தவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படி நடக்கவிடுவதைவிட அவர்களுக்கு மரண தண்டனையை விதித்துவிடுவதே கருணை என்று நினைக்கிறேன். இன்னம் இவைபோன்ற அநேகவழிகளாகிய நம்மை பாதிக்கக்கூடிய பல விஷயங்களிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் வெளியில் நின்று காரியத்தை சாதித்துவிட முடியாது. சட்டசபைகளிலும், முனிஸிபாலிட்டியிலும் இவைபோன்ற மற்ற பொதுசபைகளிலும் நாமும் கலந்து உட்காரும் பாத்தியத்தைப்பெற முயற்சிக்கவேண்டும். நம் பாத்தியத்தை ஊக்கத்துடன் வற்புறுத்திக்கொண்டே வந்தால் அடைந்துவிடலாமென்று நம்பிக்கை வருகிறது.

சொத்து உரிமை விஷயத்தில் ஸ்திரீகளாகிய நமக்கு பெற்றோர்களால் கொடுக்கப்படும் ஸ்திரீதனங்களும், புருஷனது சொத்தில் ஜீவனாம்சமும் தான் கூடுமானால் கிடைக்கும். ஜீவகாலமெல்லாம் சுகதுக்கங்களை சமமாய் அனுபவித்த அருமையான மனைவிக்கு ஜீவனாம்சம் என்கிற சொற்ப பாகந்தானா? பிள்ளைகள், தாயாதிகளைப்போல் சமபாகம் அடைவதற்கு ஸ்திரீகள் பாத்திரர்களில்லையா என்பதும் நிச்சயிக்க வேண்டியவிஷயமே.

முதலில் நாம் எந்தவிஷயத்தையும் அடைய முயற்சி செய்வதிலாகட்டும் அல்லது நிலைமையை திருத்திக்கொள்வதிலாகட்டும் அவைகளை நமது நாட்டிற்கு ஒத்தவழிகளிலேயே நடத்தப்பார்ப்பது உத்தமமல்லவா? அனுபவமும் திறமையும் வாய்ந்த மேல்நாட்டு ஸ்திரீகளின் உதவிகளையும், ஆலோசனைகளையும், அடைவது இழிவென்று தோன்றவில்லை. ஆனால் நம் கருத்து அவர்களாலேயே உருவாக்கப்படவோ அல்லது அவர்களைப்போல் நாமும் நடிக்கவோ கூடாது. இவைகளெல்லாம் இந்திய ஸ்திரீகளின் ஸ்வதர்மத்தையும் லக்ஷியத்தையும் அநுசரித்து நடத்தப்பட வேண்டும்.

நமது கோரிக்கைகளும் முன்னேற்றமும் ஜயமடைவதற்காக கடவுளையும் சகோதர சகோதரிகளையும் வேண்டிக் கொள்வோமாக.

சென்ற மூன்று மாதத்தில் ஸ்திரீகளின் முன்னேற்றம்

ஸ்திரீ தர்மத்தின் கடைசி சஞ்சிகை சென்ற ஏப்ரல்மீ வெளிவந்தது. சென்னை மாகாணத்து ஸ்திரீகள் வோட்டு பெற்ற விஷயத்தை அதில் குறிப்பிட்டோம். அடுத்த மேமாதத்தில் மாதர் இந்திய சங்கத்தார் மைசூர் மாகாணத்தில் பெங்களூரிலும், மைசூர் கஸ்பாவிலும், மற்ற பட்டணங்களிலும், ஸ்திரீகளின் வோட்டு சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய்தார்கள். பற்பல ஸ்திரீ ஸமாஜத்தார்களும் தங்கள் தங்கள் காரியதரிசி முதலிய உத்யோகஸ்தர்களோடு ஏகோபித்து மிக ஊக்கத்தோடு பொதுக்கூட்டங்கள் கூடினர்; மைசூர் மாகாணத்தில் சட்டசபையிலும், நாநாவிதமான லோகல் போர்டுகளிலும், கவுன்ஸில்களிலும், ஸ்திரீகள் வோட்டுக் கொடுப்பதற்கும் மெம்பர்களாக வருவதற்கும் தடையாயிருந்த சட்டத்தை ரத்து செய்யும்படி மஹாராஜாவுக்கும் அவர்கள் துரைத்தனத்தாருக்கும் விண்ணப்பம் செய்துகொண்டார்கள். மிஸ்ஸஸ் சந்திரசேகர ஐயர் முதலிய பல பிரமுகர்களான ஸ்ரீமதிகள் ஸ்திரீகளின் பிரதிகாரியஸ்தர்களாக ஒருமித்துச் சென்று மைசூர் திவானைப் பார்த்ததில், மைசூர் சட்டசபை அடுத்த தரம் கூடும்போது விஷயம் விவகரிக்கப்படுமென்று அவர் ஆதரவாய் விடையளித்திருக்கிறார்.

ஜூன்மீ மத்தியில் பம்மாய்ப் புதுச்சட்ட சபையில் அதன் டிப்டி பிரசிடெண்டாகிய ராவ்ஸாஹெப் ஹரிலால் தேசை என்பவர் ஸ்திரீகளுக்கு வோட்டு சுதந்திரம் கொடுக்கப்படுமாறு தாம் ஒரு தீர்மானம் பிரேரிக்கப்போவதாக ஷை சபைக்குத் தம் கருத்தைத் தெரிவித்தார். அது விஷயமாய் பம்பாய் ராஜதானிப் பொதுஜனங்களை அவருக்கநுகூலமாய்ச சம்மதி கொடுக்கும்படி தயார் செய்ய ஒரே மாதந்தானிருந்தது. மாதர் இந்திய சங்கத்தார் முதன்மையாக நின்றுழைத்து, அதன் பயனாக அம்மாதத்திற்கு ஸ்திரீகளுடைய மாதம் என்றே பெயர் வைக்கப்பட்டது. பம்பாயில் நம் கிளைச்சங்கத்தினர் தான் முதலில் சபை கூட்டினார்கள். ஸ்திரீகளின் வோட்டுக் கிளர்ச்சிக்கு மூலாதாரமான சில முக்கிய கருத்துக்களை மிஸ்ஸஸ் கஸின்ஸ் என்னும் மாது விவரித்தார். பிறகு அம்மாதத்தில் பத்தொன்பது ஸ்திரீ ஸமாஜங்களின் ஐக்ய ஆதரணையில்

விசேஷமான பெரிய சபையொன்று ஸ்ரீமான் தேசை என்பவருக்கு அநுசரணையாக கூடியது. லேடி டோராப் டாடா என்பவர் அக்ராஸனம் வகிக்க, பற்பல ஸமுதாயத்தைச் சேர்ந்த ஸ்திரீகளும், வோட்டின் ஆவசியகத்தைப்பற்றி வெவ்வேறு காரணங்களுடைய வெவ்வேறு திறத்தார்களான மாதர்களும் வந்திருந்தனர். ஸூரத்திலும், ஆமதாபாத்திலும் அதே மாதிரி சபைகள் கூடின. பூனாவின் பல பாகங்களில் வெவ்வேறு ஜனங்களுக்கு நாலு மீட்டிங்குகள் கூடின. பூனாவில் இது பிரமாதமான கிளர்ச்சியாய்விட்டது. மிஸ்ஸஸ் ராமாபாய் ரானடே, மிஸ் ஸோராப்ஜி என்னும் ஸ்ரீமதிகள் தான் அங்கு முக்கிய தலைவர்கள். சட்டசபையில் விவகாரம் நடந்தபோது ஸ்திரீகள் ஆஜராகவேண்டியதற்குத் தக்க ஒழுங்குகளையும் ஏற்பாடுகளையும் நமது சங்கத்தின் பிரதிநிதிகளாகிய மிஸ்ஸஸ் கஸின்ஸும் மிஸ்ஸஸ் வாடியாவும்கூட உதவியாயிருந்து செய்வித்தார்கள். ஸேவை-ஸதனம் என்னுமிடத்தில் கூடிய கூட்டத்திற்கு எண்ணூறு ஸ்திரீகள் வந்திருந்தார்கள். மீட்டிங்கு மிக ஊக்கமாய் நிகழ்ந்தது. அநேக ஸ்திரீகள் ஒருவர் பின் ஒருவராக வோட்டின் ஆவசியகத்தைப் பற்றித் தாமே வலுவில் எழுந்து பேசினார்கள்.

பம்பாய்ச் சட்டசபையில் ஸ்திரீகளின் வோட்டு விஷயமான விவகாரம் மிக முக்கியமாய்க் கருதப்பட்டபடியால் விவகாரம் முடிவுற ஜூலை 27, 28, 29வ ஆக மூன்று நாள் பிடித்தது. பேசினவர்கள் நாற்பது பேர்களுக்கு மேலேயே இருக்கும். முதலில் சட்டசபையிலுள்ள இங்கிலீஷ்காரர்களும் மஹம்மதியர்களுமாகச் சேர்ந்து எதிர்த்துத் தீர்மானத்தை நிறைவேறவொட்டாமல் செய்துவிடுவார்களோவென்ற பயம் எமக்கிருந்தது. விவகாரம் நடந்த பொழுது ஆக்ஷேபங்களுக்கெல்லாம் சமாதானம் சொன்னதின்மேல் தீர்மானம் நிறைவேறியது. சட்டசபை அங்கத்தினர்களில் 52 பேர் நமக்கு அநுகூலமாகவும் 25 பேர் பிரதிகூலமாகவும் 15 பேர் ஒன்றிலும் சேராதவர்களாகவும் இருந்தார்கள். இவ்வளவுமட்டில் மிக திருப்திகரமாக முடிந்ததற்குக் காரணங்கள் நமக்கநுகூலமாய்ச் சட்டசபையில் பேசும்படி புது மெம்பர்களை வேண்டிக்கொண்டதும், சட்டசபையில் விவகாரம் நடக்கும்போது அதை ஆத்திரத்தோடு கவனிக்க பூனா ஸ்திரீகள் பெருந்திரளாக ஓயாமல் வந்து கொண்டிருந்ததுமேயாம். ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கும் பாதிரிமார்களுக்கும் உறவான மேல் நாட்டு ஸ்திரீகள் தமது இந்தியச்சகோதரிகளுக்காக ஒத்துழைத்த விஷயம் மிக உத்ஸாகத்தையே கொடுத்தது.

நெல்லூர் முனிசிப்பாலிட்டியில் மிஸ்ஸஸ் நரசிம்மையா முனிசிபல் கவுன்ஸிலராகவும் மிஸ் பால்லார்டு என்பவ நெல்லூர் டிஸ்டிரிக்ட் போர்டிலும் ஆகச் சென்னை ராஜதானியில் இவ்விருவர்களும் சர்க்காரால் நியமனம் பெற்றது இந்த ராஜதானிக்குப் பெருமையே. ஸ்திரீகளின் அபிவிருத்தி இன்னும் ஒரு படிமேற் சென்றிருக்கிறதென்பதற்கு இது ஒரு சூசனை. சென்னை நகரிலுள்ள எல்லா ஸ்திரீ ஸமாஜங்களின் ஐக்ய ஆதரணையில் ஸெனட் ஹவுஸ் புத ஸெனட் மண்டபத்தில் ஸ்திரீளில் வெவ்வேறு திறத்தாரும் வந்திருந்த பெரிய ஸதஸ் ஒன்று நடைபெற்றது. அதில் நடந்தவிஷயமாவது :—ஸ்திரீகளுக்கு அவர்கள் தகப்பனாரோ புருஷனோ இறந்தால் அவர்களுடைய சொத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட பாகம் கிடைக்கும்படி சட்டசபையின் மூலமாய் ஹிந்துக்களுடைய சட்டத்தை சீர்திருத்த ஏற்பாடு செய்ய ஸ்ரீமான் சேஷகிரி ஐயரவர்கள் செய்யும் பெருமுயற்சிக்கு நாம் அநுகூலமாயிருக்கவேண்டுவதற்காக அக்கூட்டம் கூடியது. இவ்விஷயத்துக்கு அநுசரணையாக இந்தியாவின் மற்றப் பட்டணங்களிலும் ஸ்திரீகள் கூடித்தீர்மானித்துவருகிறார்கள். இம்மாதிரிச் சட்டமொன்று ஏற்படுமானால் பணவிஷத்திலும் ஹிந்து ஸ்திரீகளுக்கு விசேஷ ஸ்வாதந்த்ரியம் ஏற்படும். தவிரவும் வெவ்வேறு ஜாதியார்கள் அல்லது வர்ணத்தார்களுள் தங்கள் தங்கள் மதத்தை விட்டு விலாமலே விவாகங்கள் ஏற்படல் சட்ட விரோதமாகாது என்னும்படியான மசோதா ஒன்றை டாக்டர் கௌர் என்பவர் பிரேரணை செய்யப்போகிறார். அதைச் சர்க்கார் ஒப்புக்கொள்ளலாம் என்பதற்குச் சென்னைச் சட்டசபையார் சம்மதம் கொடுத்திருக்கிறார்கள். பம்பாய் நகரில் வியபிசாரத்தின் கொடுமை அதிகரித்தே வருவதால் அதைக்குறைக்கவும் தடுக்கவும் உபாயங்களை விசாரித்துச் சிந்திக்க ஒரு கம்மிட்டீ நியமிக்கவேண்டுமென்று பம்பாய்ச் சட்ட சபையில் தீர்மானமொன்று பிறந்திருக்கிறது. அக்கம்மிட்டியில் ஸ்திரீகளும் இருத்தல்வேண்டுமென்பது எமது அபிப்பிராயம். இவ்வாறு ராஜகீய விஷயமாகவும் நகர பரிபாலன விஷயமாகவும் செல்வச் சுதந்திர விஷயமாகவும் ஜனஸமுதாயத்தில் தம் அந்தஸ்து விஷயமாகவும் சென்ற மூன்று மாதங்களில் ஸ்திரீகளின் உழைப்பும் அபிவிருத்தியும் அதிகமாகவே உள்ளன.

TELUGU

మనస్వాతంత్ర్యము.

గతమాసమున మదరాసు శాసన సభలో చెన్నపురి రాజధాని స్త్రీలకు ఎన్నిక (Vote) నిచ్చు నధికారము నంగీకరింపబడినది. ఈ యధికారమాచరణలోనికి వచ్చుటకు మునుపే మనదేశపు రాజకీయ తెగలలో నొక తెగవారు కనీసము పది సంవత్సరములవరకు యీ యధికారము నాపి వేయవలెనని వారిసభయందు తీర్మానించి యున్నారు. ఈ తీర్మానము చొప్పున సర్కారు వారు నడుపరను నమ్మకమున్నను ఇట్టి తీర్మానము ప్రముఖులచే తీర్మానింప బడి యుండుట కడుశోచనీయమని వేరే జెప్పవలయునా? సామాన్య మనుష్యు లట్టి తీర్మానమును జేసి యుండిన పాటింప బనిలేకయుండె. విద్యావంతులయ్యు, దేశహితులయ్యు, గౌరవనీయులయ్యు ఈ తెగవారు స్త్రీలకు గలిగిన అధికారమును ఆపి వేయించుటకు యత్నము జేసి యుండుట మనకేమి పాఠము నేర్పుచున్నది.

“ఉద్ధరే దాత్మ నాత్మానం” అను భగవద్వాక్యము ననుసరించి మనస్వాతంత్ర్యమును కష్టపడి మనము సంపాదించవలసినదే గాని పురుషులనుండి పరిగ్రహించుట సరికాదు. అయితే సర్వవిధముల బద్ధులైయుండు మనము మన స్వాతంత్ర్యమెట్లు సంపాదింప నోపుదము? నేన సహాయోద్యమ పక్షపాతిని గాను. ఈ సహాయమువలననే సమస్త కార్యములు చేకూరునని నమ్మెద. ఈ నమ్మకము చేతనే మనము మనస్వాతంత్ర్యము సంపాదించ వచ్చునని తలచెద. అయితే మన ముద్యమించక యూరకుండిన నది సాధ్యపడదు.

అట్లైన, మన యుద్యమ మెట్టిదైయుండ వలయును? మన స్థితిగతులను బట్టి దీనికుత్తరమున్నది. మన దేశపు స్త్రీలను మూడు తెగలగ విభజింప వచ్చును. అవియెవ్వియనిన :—(1) విద్యావతులు (2) అవిద్యావతులు (3) ఉభయ మధ్యస్థులు. ఈ మూడు

తెగల వారికిని ఉద్దేశ ధర్మములు వేరు వేరుగ నుండు. వానిని తెలిసికొనెదము.

(1) విద్యావతులు.

విద్యావతులను శబ్దమునకు అర్థము చెప్పుటకష్టము. చదువుటకును, వ్రాయుటకును నేర్చినంత మాత్రమున విద్యావతులని జెప్పవలవి గాదు. మాతృభాషయనియు, ఆంగ్లేయ భాషయనియు, రెండు విధములైన భాషలు మనదేశమున నుండుటచే దేనిని చదివి వ్రాయ నేర్చిన వారు విద్యావతులని చెప్పనగును? ప్రకృత దశలో మనకింగ్లీషు రాకున్న, ప్రపంచమునందంతటను జరుగుచుండు మార్పులు మనకు తెలియ జాలవు. మనదేశము ప్రపంచములో నొక భాగమై యుండుటచేతను, ప్రపంచాభివృద్ధికి మనదేశము తోడ్పడుట కడు ముఖ్యమని రాజతంత్రజ్ఞులు చెప్పుచుండుటచేతను మనము తెలిసి చేయవలసిన కార్యములు చాలయున్నవి. ఇంగ్లీషు భాషను నేర్చినగాని మనమా కార్యములను తెలిసి కొనుట సాధ్యపడదు. కావున మన మాతృభాసతోపాటు ఇంగ్లీషు భాష నేర్చుకొనుట యవసరము. మాతృ భాషవలన మన పూర్వుల స్థితి గతులను చదివి తెలిసికొనవచ్చును. ఇంగ్లీషు నేర్చిన, లోకములోని ప్రస్తుత స్థితి గతులను చదివి తెలిసికొనవచ్చును. వట్టిభాషలు నేర్చిన మాత్రమున మనము చదువరులమగుదమే గాని విద్యావతులము కాజాలము. చదువరు లనేకులు గర్వాహంకార యుక్తులై ముందు వెనుక నాలోచింపక తమ యభిప్రాయమే సరియని జెప్పుచు దురభిమానము గలవారై వ్యంగ్యముగ వర్తించెదరు. ఈ కారణముచేతనే విద్యావతులకు చెడ్డపేరు కలిగినది. నిజమైన విద్యావతులు విశాలమైన గొప్ప గొప్ప యభిప్రాయముల గలవారై కాల చిహ్నములను గుర్తించి మార్పుల కనుగుణముగా నడచుటకు సిద్ధమై లోకహితమే తమ హితమని భావించుచు నిరభిమానము గవర్తించెదరు. ఇట్టి స్థితిలేనివారు విద్యావతులని జెప్పబడరు. తమ స్వాతంత్ర్యమందభిమానముగల చదువరులందరునుపై జెప్పినట్లు ప్రవర్తించినచో పురుషులెవ్వరును మన స్వతంత్రమునకు విరుద్ధముగ నడవ జాలరు. స్త్రీలకు స్వతంత్రమే అవసరము లేదని తలచి వర్తించు పురుషులమాట మన కక్కరలేదు. ఏల యన, వారు మనుష్య సంఘమున నితర ప్రాణులను భక్షించి జీవించు క్రిమికీట కాదులవలె నున్నారు. మనకు వారిజోలి యవసరములేదు. అట్టి వారికి సంబంధించిన అవిద్యావతులగు స్త్రీలకుపూర్వాకర్మము బాగుగ లేదనియే జెప్పనగు. వారి యాశ్రయమున నుండు విద్యావతులు మాత్రము తమ స్వతంత్రమును నెట్లైనను సాధించు కొనవలయును. విద్యావతులప్పుడప్పుడొక చోట సమావేశమై తమసోదరీ మణులకు గలిగియుండు కష్టనష్టయు సందర్భములను పర్యాలోచించి వాటిని పరిహరించు నిమిత్తము సదుపాయములను కనుగొని పాటుపడవలయును. గృహకార్యముల మాత్రమే తమకు చాలునని తలచుచు తమకు ప్రాప్తించియుండు విద్యాబలమును దేశహితమునకై వినియోగించ కుండుట చోపాకరమని నిర్భయముగ జెప్పవచ్చును. ఇట్లుజెప్పిన, విద్యావతులు గృహకృత్యముల విడచి వర్తించ వలయునని కాదు. తమ యిరేటి పనులు ముగియగానే చదువురాని తమ సోదరీ మణులకు విద్యాబుద్ధుల నేర్పుచు, స్వాభావికముగ స్త్రీలకు భగవంతు డిచ్చియున్న "పురుష సమత్వ" భావమును కనుగొను నట్లు జేయ వలయును. వెయ్యేల, స్త్రీ స్వతంత్ర నావను దరిజేర్చువారు విద్యావతులైన స్త్రీలేగాని మరెవ్వరుగాదు.

అవిద్యా వతులు

వీరికి విద్యా బలము లేకున్నను ప్రేమ బలమున్నది. త్వరగ చదువు, వ్రాతను నేర్చుకొని విద్యావతు లగుటకు వీరు ప్రయత్నించ వలయు. అనేకులు మోటు వర్తన గల వారై మార్పుల నంగీకరించక యున్న స్థితి యందే యుండుటకు యత్నించుచుందురు. వారికి జడత్వమును పోగొట్టి దేశహిత మందభిమానమును పుట్టించి సద్విద్య నిచ్చి పాటు పడునటుల జేయవలయును. ఈ పనిని విద్యావతులు జేయవలసినది. వీరి చిత్తవృత్తులను మార్చుట కష్టమైనను మాఢ్యమును పోగొట్టి విద్య నిచ్చినచో వీరు చాలపనిచేయగలరు. పెద్దలు చెప్పినట్లు విని నడవవలయునను తలంపు వీరియందెక్కువగ నుండుటచే వితరణగ తెలివి నిచ్చిన వారు చక్కగ పాటు పడగలరు. వారికి జీవితోద్దేశమేమో తెలియదు. యుక్తమైన విద్యవలన యివి యన్నియు సరిపడగలవు.

ఉభయ మధ్యస్థులు.

విద్యయొక్క ముఖ్యోద్దేశమే తెలియక కొద్దిగా చదువుటకు నేర్చుకొని అనవసరములైన గ్రంథములను చదువుచు సులభముగ కాలయాపనము జేయువారే వీరు. అవిద్యావతులవలె, విధేయులు గాక, విద్యావతులవలె తెలివిపరులుగాక దేని యందును నమ్మకము లేక మిథ్యాచారము గల యితరగతివారు దేశహితమునకై పాటు పడుటకు ద్యమించుట యొక యసాధ్యమైనపని. డంభాచార ప్రియులగు వీరిని వితరణవతులగాజేయుట కడుదుస్తరమే. అయినను తప్పక యత్నించి వారిని నూతన ప్రవాహములోనికి దించుట విద్యావతుల ధర్మమైయున్నది.

సోదరీ మణులారా? లోకమంతయు మార్పులను పొందుచుండ మనకు స్థితి వ్యత్యాసముకలుగుట దుస్తరముకాదు. మనపక్షమున భగవంతుడున్నాడు. స్వతంత్రము కోరని ప్రాణులే లోకమందు లేకున్నను మనముమాత్రము బహుకాలముగ నస్వతంత్రులమై వర్తించుచుంటిమి. దీనివలన మన మనేక పాఠములను నేర్చితిమి. స్త్రీ పురుషు లిరువురును సమమనియు భగవత్కైంకర్యమున నిరువురును సమభాగులనియు నుభయులుగ్రహించి వర్తించవలసిన కాలమిపుడాసన్నమైయున్నది. విరుద్ధ ప్రయత్నములెన్ని నడచినను మనకు